2025 – ஜனவரி மாதம் 23– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 295 / 2023 C/W 296 / 2023*

*2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 23– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 2, ஜெயராமன் |
| தகப்பனார் பெயர் | : | ஜெயராமன் |
| ஊர் | : | வடக்கு தெரு, செஞ்சேரி கிராமம், |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | கட்டிட வேலை |
| வயது | : | 44 |

<u>தேதி: 23.01.2025.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் எம்சிஓபி நெம்பர் 296/2023 மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

<u>எனது சார்பாக :–</u>

**9).** பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் **ம.சா.ஆ.9. (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

**10).** பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் 10.07.2023 முதல் 11.07.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று அசல் **ம.சா.ஆ.10.**

**11).** எனது ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது. அது **ம.சா.ஆ.10.** ஆக தாக்கல் செய்கின்றேன்.

எனக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்று **நீ.ம.சா.ஆ.**2 ஆகும்.

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**<u>குறுக்கு விசாரணை:- (2-ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

இந்த வழக்கில் நான் புகார் கொடுக்கவில்லை. விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டிச்சென்ற ம.சா.1 தங்கராஜ் எனது நண்பர், 10 வருடங்களாக அவர் எனது நண்ராக இருந்து வருகின்றார். நானும், தங்கராஜீம் கட்டிட கூலி வேலை செய்கிறோம். விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு கழகத்தை மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லையென்றால் சரிதான். நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு முறையான ஆவணங்கள் உள்ளதா இல்லையா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி, பெரம்பலூர் நோக்கி வந்து கொண்டிருந்தேன். விபத்து நடந்த இடத்தில் நான்கு ரோடு பிரிகின்றது என்றால் சரிதான். எங்கள் மீது மோதிய கார் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்தது. விபத்து நடந்த இடம் வடபுறம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு சேதங்கள் ஏற்பட்டதா என்றால் சேதங்கள் ஏற்பட்டதாக ம.சா.1 தங்கராஜ் சொன்னார். செஞ்சேரி கிராமம், சொக்கநாதபுரத்தில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தங்கராஜ் வாகனத்தை ஓட்டிச்சென்ற போது தலைக்கவசம் அணியவில்லையென்றால் சரியல்ல, அணிந்திருந்தார். விபத்து நடந்த இடத்தில் நான்கு புறமும் வாகனங்கள் வந்து செல்லும் இடம் என்றால் சரிதான். நான் தான் திடீரென்று மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்ததால் தான் நிலை தடுமாறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. காருக்கும் எங்களால் சேதம்

ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது நண்பர் தங்கராஜின் வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டது என்பது குறித்து வட்டாரப்போக்குவரத்து அலுவலரிடம் வாகனத்தை ஒப்படைத்தாரா, இல்லையா என்ற விபரத்தை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. காவல் நிலையத்தில் புகாரை தங்கராஜ் ஒரு நாள் காலதாமதமாக பின்னிட்டு யோசனை செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சென்ற இருசக்கர வாகனத்திற்கு சட்டப்படியான எந்த ஆவணங்களும் இல்லாததால் கார் மீது ஆள்பலத்தை கொண்டு வழக்கு பதிவு செய்ய வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் பயணம் செய்த இருசக்கர வாகனம் 15 வருடங்களுக்கு மேற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அவர் என்னிடம் சொல்லவில்லை. விபத்தினால் எனக்கு ரூபாய் ஒரு லட்சம் வரை செலவு ஆனது என்பதை காண்பிக்க மருத்துவ பில்கள் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். ஆனால் மருத்துவ விடுவிப்பு தாக்கல் செய்துள்ளேன். மருத்துவ சிகிச்சை செய்தது சம்மந்தமான ஆவணங்கள் மெடிக்கல் பிரிஸ்கிரிப்ஷன் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் வாகனத்தை வைத்து சிகிச்சைக்கு சென்றதாகவும், அதற்காக ரூபாய் இரண்டு லட்சம் செலவு ஆனதாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் மாதம் ரூ. 15.000/– வருமானம் ஈட்டி வருவதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எனது வயதை காண்பிப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பக்காயங்கள் என்றும், அந்த காயங்கள் குணமாகி விட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் பயணம் செய்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றும், நாங்கள் தான் அஜராக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்தினால்

எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இன்று வரை சிகிச்சை மேற்கொண்டு வருகின்றேன் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு சிகிச்சை எடுத்து வருவதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் இன்று நீதிமன்றத்திற்கு தனியாகவே வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**